**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 54** **நாள்: 17.04.2024**

**சென்னை மாவட்டத்தில் பதற்றமான வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள நுண் பார்வையாளர்களுக்கு (Micro Observer's) 18.04.2024 அன்று நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்பில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 19.04.2024 அன்று நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள நுண்பார்வையாளர்களுக்கான (Micro Observer's) இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்பு 18.04.2024 அன்று (வியாழக்கிழமை) நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்புகளில் நுண்பார்வையாளர்களுக்கு (Micro Observer's) ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய ஆணைகள் வழங்கப்படும்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் பணிபுரியவுள்ள நுண்பார்வையாளர்களுக்கான (Micro Observer's) முதற்கட்டப் பயிற்சி வகுப்பு 12.04.2024 அன்று நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, அனைத்து நுண்பார்வையாளர்களுக்கான (Micro Observer's) இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்பு 18.04.2024 அன்று (வியாழக்கிழமை) பின்வரும் அட்டவணைப்படி பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெறவுள்ளது.

**02. வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி**

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | பயிற்சி மற்றும் ஆணை வழங்கும் நேரம் |
|---|---|---|
| 1. | 11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை |
| 2. | 12. பெரம்பூர் | |
| 3. | 13. கொளத்தூர் | |
| 4. | 15. திரு.வி.க.நகர் | |
| 5. | 17. இராயபுரம் | |

### *04*. மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | பயிற்சி மற்றும் ஆணை வழங்கும் நேரம் |
|---|---|---|
| 1. | 14. வில்லிவாக்கம் | காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை |
| 2. | 16. எழும்பூர் | |
| 3. | 18. துறைமுகம் | |
| 4. | 19. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி | |
| 5. | 20. ஆயிரம்விளக்கு | |
| 6. | 21. அண்ணாநகர் | |

### *03*. தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | பயிற்சி மற்றும் ஆணை வழங்கும் நேரம் |
|---|---|---|
| 1. | 22. விருகம்பாக்கம் | பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரை |
| 2. | 23. சைதாப்பேட்டை | |
| 3. | 24. தியாகராயநகர் | |
| 4. | 25. மயிலாப்பூர் | |
| 5. | 26. வேளச்சேரி | |

மேலும், அனைத்து நுண் பார்வையாளர்களுக்கும் *(Micro Observer's)* குறுஞ்செய்தி *(SMS)* வாயிலாக பயிற்சி மையம் மற்றும் நேரம் குறித்த விவரங்கள் அனுப்பி வைக்கப்படுகிறது. நாடாளுமன்ற பொதுத்தேர்தல் பணிக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அனைத்து நுண்பார்வையாளர்களும் *(Micro Observer's) 18.04.2024* (வியாழக்கிழமை) அன்று நடைபெறும் பயிற்சி வகுப்பில் தவறாமல் கலந்து கொண்டு தங்களுக்குண்டான வாக்குச்சாவடி விவரங்கள் அடங்கிய ஆணையினைப் பெற்றுக் கொண்டு தேர்தல் பணியினை செவ்வனே செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளாத நுண்பார்வையாளர்கள் *(Micro Observer's)* மீது தேர்தல் நடத்தை விதிகளின்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களும், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்களும் தெரிவித்துள்ளனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**